## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி





# இனியவள்

## 2023

## கல்லூரி அகவை

## 23

### கவிதைத் தொகுப்பு

**கணித மன்றம்**
**20 ஆம் அணி**

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

**02.05.2023**

கல்லூரி அகவை 23ஐ நினைவுகூரும்

கவிதைத் தொகுப்பு

# இனியவள்

**ஆக்கம்**

**கணித மன்றம்**

**20ம் அணி**

## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி திரு.சுப்ரமணியம் பரமானந்தம் அவர்களின் வாழ்த்துச் செய்தி



''எனது ஆற்றல்களே என்னை வெளிப்படுத்தும்'' என்ற இவ்வருட கல்லூரியின் தொனிப்பொருளிற்கு அமைய 20ம் அணி கணிதம் தமிழ்மொழி மூல மாணவ ஆசிரியர்களால் 23வது வருட கல்லூரி தினத்தை முன்னிட்டு ''**இனியவள்**'' எனும் கவிதைத் தொகுப்பு நூல் வெளியிடப்படுவதையிட்டு அகமகிழ்வடைகின்றேன்.

இக் கவிதைத் தொகுப்பானது கல்லூரி தொடர்பான மாணவ ஆசிரியர்களுடைய பிரதிபலிப்பாகவும் அனுபவப்பகிர்வாகவும் அமைந்துள்ளது. புத்தாக்கங்கள் ஊடாக மாணவர்களது ஆளுமைகளை வெளிப்படுத்த அவர்களை வழிப்படுத்தி கவிதைத் தொகுப்பு நூலினை வெளியிட ஊக்கமளித்த நிறுவன அபிவிருத்திக்கான உபபீடாதிபதியும் கணிதமன்ற உபகாப்பாளருமான திரு.அருணாச்சலம் குகன் அவர்களிற்கு எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாறான ஆக்கத்திறன் வெளிப்பாடுகள் மற்றும் அவர்களின் பங்களிப்பு பாராட்டுதலுக்குரியதுடன் இவ் மாணவ ஆசிரியர்கள் பன்முக நுண்மதியும் ஆளுமையும் கொண்ட வாண்மைத்துவ ஆசிரியர்களாக மிளிர வாழ்த்துக்களையும் இறை ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்.**
**பீடாதிபதி.**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி.**

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் நிறுவன அபிவிருத்திற்கான உபபீடாதிபதி திரு.அருணாசலம் குகன் அவர்களின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் அகவை 23 தினத்தில் கணிதத்துறை தமிழ்மொழிமூல மாணவ ஆசிரியர்களால் **"இனியவள்"** எனும் கவிதைத் தொகுப்பு வெளிவருவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இனிமையான நினைவுகளைத் தாங்கிவரும் இக்கவிதைத் தொகுப்பிற்கு "இனியவள்" என்ற இனிமையான பெயரைச் சூட்டியுள்ளனர். இக் கவிதைத் தொகுப்பு மாணவ ஆசிரியர்களின் கலையுணர்வை வெளிப்படுத்தி நிற்கும் அதேவேளை அவர்களின் கல்லூரி மீதான ஈடுபாட்டையும் மதிப்பு மரியாதையையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

கணித சாஸ்திரத்தில் வல்லுனர்களான எம் கணிதத்துறை மாணவ ஆசிரியர்கள் கலைத்துறையிலும் சளைத்தவர்களல்ல என்பதை இக்கவிதைத் தொகுப்பு வெளிப்படுத்தி நிற்கின்றது. எதிர்காலத்தில் கணித விற்பன்னர்களை உருவாக்கும் பணியில் ஈடுபடவுள்ள இவர்களிடம் காணப்படும் கல்லூரி மீதான காதலும் பாசமும், அவர்கள் பணியாற்றவுள்ள பாடசாலைகளிலும் புலப்படும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இனிவரும் காலங்களிலும் இவ்வாறான செயற்பாடுகளில் தமது திறமையை வெளிப்படுத்த எல்லாம் வல்ல வித்தக விநாயகரையும் முடிமன்னர் வைரவரையும் வேண்டி நிற்கின்றேன்.

**அருணாசலம் குகன்**
**கணித மன்ற உபகாப்பாளர்**
**உபபீடாதிபதி நிறுவன அபிவிருத்தி**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**

# பொருளடக்கம்

1. என் சிந்தையில் கல்லூரி
2. கல்லூரிப் பயணம்
3. தெய்வத் தென்றல்
4. கல்லூரி வாழ்க்கை
5. எம் தாயவள்
6. வழிகாட்டி
7. கல்லூரி
8. கல்லூரிச்சாலை
9. கல்லூரிச் சாரல்
10. எதிர்பார்ப்பு
11. நினைத்தாலே இனிக்கும்
12. என் வாழ்வில் என் கல்லூரி
13. கலைமகளே
14. கல்லூரி நாட்கள்
15. சிற்பி
16. கல்லூரிப் பயணம்
17. வார்த்தை இல்லை வாழ்க்கை
18. தேவதை
19. எம் கல்லூரி
20. மீண்டும் அடைவேனா?

# 1. என் சிந்தையில் கல்லூரி

**கல்லூரி**

வழியின்றி சிரிக்கும் சிரிப்பிற்கும்
வலியின்றி சிரிக்கும் சிரிப்பிற்கும்
அர்த்தங்கள் ஆயிரம் உண்டு
வலிகளைச் சுமந்து வழியைத்
தேடிய – என்
வாழ்க்கைப் பயணத்தில்
கலங்கரை விளக்காக
கைகொடுத்தது – என்
கல்லூரி!

**கல்லூரி வாசல்**

கனவுகளோடு
கால்பதித்து
நினைவுகளோடு
திரும்பும் ஓர்
அருங்காட்சியகம்.!

**கல்லூரிக்காலம்**

முடியும் வரையில்
முடியுமா என்றிருக்கும்
முடிந்த பின்பு – மீண்டும்
முடியுமா என்றிருக்கும்.



**ஆக்கம் : இ.அபிநயா**
**கணிதம் தமிழ்மொழி மூலம்**

# 2. கல்லூரிப் பயணம்

அவளுடைய அழைப்பிற்காய்
ஆண்டுகள் கடந்தும் காத்திருந்தேன்
அன்று காத்திருப்போர் பட்டியலில்
அவரசரமாய் ஒரு அழைப்பு
தயக்கத்துடன் வந்த என்னை
ஆசானாய் ஜனிக்க வைத்தாள்
கருவறையில் முதல் ஜனனம்
வகுப்பறையில் மறுஜனனம்
கண்டிப்புடன் சில கட்டுப்பாடுகள்
நித்திரைக் கலக்கத்துடன்
பல காலைப்பொழுதுகள்
மைதானத்தில் தொடங்கிய ஓட்டம்
மாலை வரை முடிவதில்லை
ஆண்டுகள் இரண்டு ஆவதற்குள்
எத்தனை கலகங்கள், எத்தனை ஏக்கங்கள்
அத்தனையும் இரசிப்பதற்குள் பள்ளிக்காய் பிரவேசம்.

**"அனுபமே எல்லாவற்றுக்கும் ஆசிரியர்"**

**- Julius Caesar**

**ஆக்கம் : சி.ஜதுர்ஷனா**
**கணிதம் தமிழ்மொழி மூலம்**



## 3. தெய்வத் தென்றல்

கோப்பாயின் சிறப்பாம் யாழ் கல்வியியற் கல்லூரி
ஒப்பிலா அறமாம் எழுத்தறிவித்தலை
இயம்பிடும் இனிய ஆசான்களை
இன்றும் ஈனுகிறதே ஈழத்திற்கு

ஆசிரியம் ஆச்சரியம் ஆகிடவே
ஆச்சாரத்துடன் அச்சமின்றியே
முறையியலையும் இறையியலையும்
புகட்டுகிறதே கல்லூரி புன்னகையுடன் இன்றும்

வாய் நிறை வார்த்தைகளால் என்றும்
தாய் பிள்ளை உறவு போன்றே
சேய்களாய் கல்லூரி எமைப் போற்ற
வெற்றிக் கனியை சுவைக்கின்றோம் நாமே

கலை நோக்குடன் அழகியலையும்
தொலை நோக்குடன் தொழினுட்பத்தையும்
தூக்கி நிறுத்திடும் தூண்களாய் எமை மாற்ற
தேக்கிய அறிவை ஊக்கமாய்த் தந்திடும் எம்கல்லூரி

பீடத்தின் அதிபதி பண்புரையாற்ற
பாடத்தின் தளபதிகள் விரிவுரையாற்ற
கூடத்தின் ஊழியர்கள் அன்புரையாற்ற
வீடுபோல் திகழ்கிறதே எம் கல்லூரி

பதற்றம் போக்கும் நேரமுகாமையும்

வருத்தம் போக்கும் உடற்பயிற்சியும்

கலக்கம் போக்கும் கடவுள் வழிபாடும்

கற்றிட்டோம் நாம் கல்லூரியில்

அச்சம் போக்கி ஆளுமை அருளி

தலை நிமிர்ந்து தலைமைத்துவம் காக்க

எம் வாழ்வில் வசந்தமாய் வந்து

எமைத் தழுவிய தெய்வத்தின் தென்றலே

எம் கல்லூரி என்போம்.

**“கற்பிக்கத் துணிந்தவர் ஒருபோதும்**
**கற்றுக்கொள்வதை நிறுத்தக் கூடாது”**

- **John Cotton Dana**

**ஆக்கம் : மோ.லட்சிகா**
**கணிதம் தமிழ்மொழி மூலம்**



## 4. கல்லூரி வாழ்க்கை

பெற்றோர் தம் கைப்பிடியில்
தங்கியிருந்த எமக்கு
முற்றிலும் வேறுபட்டதாய்
இவ் விடுதி வாழ்க்கை….

பொங்கி வரும் கண்ணீரைத்
துடைக்க போட்டி போட்ட
நட்புக் கரங்கள்

ஒன்றாய் அமர்ந்திருந்து
உணவுண்ணும் நற்பண்பை
கற்றுத் தந்ததும்- இக்
கல்லூரியே

சோம்பல் தனைத் தூரமாக்கியது
காலை எழுந்ததும் செய்யும் உடற்பயிற்சி
காலை முதல் மாலை வரை
நடைபெறும் கற்பித்தல் செயற்பாடுகள்
எண்ணிலடங்கா

**ஆக்கம் : சி.மாதுமை**
**கணிதம் தமிழ்மொழி மூலம்**



இவை அனைத்தும் ஒரு சேர
யாம் பெறக் காரணமான
கல்லூரி வாழ்க்கைக்கு
என்றென்றும் தலை வணங்குகின்றோம்….

# 5. எம் தாயவள்

பசுந் தழைகள் பெருக்கெடுக்கும் கனிய வள

மரங்களையும் இயற்கை அழகு கொஞ்சும் வயல்களையும் கொண்டமைந்த

இலங்கையின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணம்

எனும் நகர மண்டலத்தில் கோப்பாய் எனும் திருவூரில்

அமைந்த வண்ணம் பல லட்ச முத்து சிற்பிகளான மாணவ ஆசிரியர்களின்

கனவு இலட்சியங்களை தூண்டா மணி விளக்கு பிரகாசமாய் ஒளிரச் செய்யும்

சிந்தனை சொல் செயல் எனும் மகுடவாசகத்தை தன்னகத்தே கொண்டு மிளிர்கின்ற

எம் கல்லூரித் தாயே எம் கல்லூரித் தாயே

கிராமம் விட்டு கிராமம் மாவட்டம் விட்டு மாவட்டம் என

பல இலட்ச மாணவ மணிகளை தன் கருவறையுயில் சுமந்த வண்ணம்

தன் பிள்ளைகள் பாரினில் சிறந்து விளங்கிட கண்ணோட்டமாய்

அமைந்துள்ள எம் தாயே

பற்பல துறைகளை தன்னகத்தே கொண்டமைந்து சீருடனே பணியாற்றி

கட்டுக்கோப்பான தலமையுடன் கூடிய நிர்வாகத்தை மிடுக்குடனே கொண்டமைந்து

தன்னிகரில்லா பணியை ஆற்றிவருகிறாள் எம் தாய்

நூற்றாண்டு கடந்தாலும் மங்காத் துணிவுடனே ஆண்டாண்டு காலம்

பல குடும்பங்களின் விடிவெள்ளியாய் அமைய என்றென்றும் துணையாய் அமைவாள் எம் தாய்



**ஆக்கம் : ஜெ.லனுஜா**
**கணிதம் தமிழ்மொழி மூலம்**

## 6. வழிகாட்டி

பல கனவுகளோடு கால் பதித்தோம்

யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியில்

முதலாம் ஆண்டு பயமுறுத்தியது

புதுப்புது மனிதர்களை முன்னிறுத்தி

கடந்தது பல மாதங்கள்

தந்தது பல நண்பர்களை

பல பாடங்களைக் கற்றோம்

அதனால் நல்ல ஆசிரியரானோம்

கனவுகள் நிறைவேறிடும்

கல்லூரி நிறைவுறும் காலத்தில்

**"ஆசிரியர்கள் கட்டளை இடாமல்
வழிகாட்ட வேண்டும் ஆதிக்கம்
செலுத்தாமல் பங்கேற்க வேண்டும்"**

\- **C.B Neblat**

**ஆக்கம் : அ.லிதர்சன்**
**கணிதம் தமிழ்மொழி மூலம்**



## 7. கல்லூரி

பள்ளிப் பருவம் முடித்து
துள்ளித் திரிந்த நாங்கள்
முகிழ்நிலை மாணவ ஆசிரியராக
கல்லூரி என்ற நந்தவனத்தினுள் நுழைந்தோம்

கூண்டை விட்டு பறக்க மாட்டோமா?
என ஏங்கிய நினைவுகள் சில
இந்த அன்பு கூண்டிலே சிறை பட மாட்டோமா?
என ஏங்கிய நினைவுகள் பல

ஆணும் பெண்ணும் நட்பில் கரைந்து
சோகம் மறந்து சொந்தம் கொண்டாடி
நட்பு வட்டத்தில் நம்பிக்கை உதித்து
நங்கூரம் ஆனதும் இங்கே தான்

சின்னஞ்சிறு குறும்பில் விளைந்த
அரும்பு மகிழ்வுகள் ஏராளம்
அன்போடு அக்கறை பொழிந்த
கல்வியலாளர்கள் இங்கே தாராளம்

வெள்ளை காகிதமாய் இருந்த எங்களை
வண்ணக் கோலமாய்,
வானவில்லின் ஒரு அங்கமாய் வரைந்தது
எங்கள் யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி.

**ஆக்கம் : க.அகல்யா**
**கணிதம் தமிழ்மொழி மூலம்**



## 8. கல்லூரிச்சாலை

வியக்க வைக்கும் உலகம்

விசாலமாய் ஒரு உணர்வு

மனதினுள் மின்மினிப்பூச்சிகள் தரும் ஒளியின் மிகைப்பாடு

தந்தை கை பிடித்து நடை பழகினோம் - இன்று

நண்பர்களாய் பூஞ்சோலைகள் ஆனோம்

விடையில்லாப் புத்தக பெட்டகம் நாங்கள்

புழுதிக் காற்றின் புதையல்கள் ஆனோம்

திணறிப்போன புன்னகையை,

பேரலையின் ஆரவாரமாய் மாற்றினோம்

புறநானூறு, அகநானூற்றில் எழுதப்படவில்லை!

இந்த உணர்வின் மகத்துவத்தை

வித்திட்ட விதையை விருட்சமாக்கினோம்

எங்கள் கல்லூரிச்சாலையில்.

**"ஆசிரியர் என்பவர் கடினமான விடயங்களை எளிதாக்கக்கூடிய ஒரு நபர்"**

- **Emerson**

**ஆக்கம் : ஜெ.டக்சனா**
**கணிதம் தமிழ்மொழி மூலம்**



## 9. கல்லூரிச் சாரல்

அளவில்லா நினைவுகளை தந்துகொண்டிருக்கும்

யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியில்

நடைபெறாத பாட வேளைகளில் தூக்கம்

நான்கு மணி ஒலி கேட்டதும் தேனீருக்கு ஓட்டம்

நண்பர்களுடன் கதை பேசிக் கலாய்த்தோம்

கவலை அறியாது வாழ்ந்தோம்

விடுதியில் களிப்பிற்குப் பஞ்சமிலிலை

ஐந்து மணிக்கு பாடல் ஒலிக்கும் என்ற எண்ணம் வரும்வரை.

**“கற்பித்தலின் மூலம் நீங்கள் கற்றுக்கொள்ள முடியும் என்ற கருத்தில் எனக்கு நம்பிக்கை உண்டு”**

**- Stphen Covey**

**ஆக்கம் : கு.கோபிராஜ்**
**கணிதம் தமிழ்மொழி மூலம்**



## 10. எதிர்பார்ப்பு

பள்ளி வாழ்க்கை தொலைந்து போனது.

சிறிது காலம் வாழ்க்கை கசந்து போனது.

நாட்கள் நகர கல்லூரி நுழைய எண்ணி அனுப்பிய

விண்ணப்பதின் பதிலை எண்ணிக் காத்திருந்தேன்.

என்ன ஒரு அதிசயம் தபால்காரர் ஒருவர் என்

வீட்டு வாசலில் நின்று மணி ஒலியும் எழுப்பினர்.

நானும் அங்கு விரய அவர் கைகளில் தபால் ஒன்றை

நீட்ட வாங்கி கையோடு அதை பிரித்துப் பார்த்தோன்.....

என்ன அதிசயம் கடவுள் தந்த வரம் ஒன்று தபாலில் வந்தது.

என்ன ஒரு ஆரவாரம் சொல்லவா வேண்டும் மகிழ்ச்சியை ......

தொலைந்து போன பள்ளி வாழ்க்கை மீண்டும் என்னை அழைத்தது.

பள்ளி வாழ்க்கை நாட்கள் மெல்ல எட்டிப் பார்க்க கண்ணில் ஆனந்தக் கண்ணீர்......

அன்று தான் கல்லூரி நாட்களின் நேர்முக தேர்வு.....

புதிய முகங்கள் பல வந்து சேர ஒருவருக்கு ஒருவர் அறிமுகம் ஆனோம்.....

அந்த நாள் தேர்வு முடிந்து சிறிது காலம் காத்திருக்க

தேர்வு முடிவு என்னை சேர ஆனந்தமானேன்...

அர்த்தம் உள்ள ஆசிரியரானேன்.

**ஆக்கம் : நெ.தர்சன்**
**கணிதம் தமிழ்மொழி மூலம்**



## 11. நினைத்தாலே இனிக்கும்....

அன்னையாய் எனை அரவணைத்தாய்
தந்தையாய் என் தலைகோதினாய்
தோழனாய் நின் தோள் தந்தாய்
வசந்தமாய் என் வாழ்வில் வந்தாய்

கரம்பிடித்தே எனை கரைசேர்ப்பாய்
வரம் தந்தே எனை வளப்படுத்துவாய்
சிரம் தாழ்த்தி உனை வணங்கி
என் சிந்தையில் என்றும் உனை நினைப்பேன்

வாழ்வின் பயணங்கள் எங்கெங்கோ தொடரினும்
நிலையாய் என மனதோடு நீயும் அங்கு பயணிப்பாய்
கல்வியாய் கலையாய் கற்பனையாய் கனவாய்
கண்ணில் நின்று கலையாத காதலாம்
என் கல்லூரியை நினைத்தாலே இனிக்கும்.

**"சிறந்த ஆசிரியர் இதயத்தில் இருந்து கற்பிக்கிறார்கள் பக்ககக்கில் அல்ல"**

**ஆக்கம் : சி.சத்திதா**
**கணிதம் தமிழ்மொழி மூலம்**



## 12. என் வாழ்வில் என் கல்லூரி

பக்குவமாய் பங்குனியில் பயணிக்க - என்
பயணத்தை தொடங்க இருந்தேன்

பயிலும் பயண பாதையை - முன்
பின் பனிக்காலத்தில் தொடங்கினேன்

கல்வியின் மேல் கொண்டேன் காதல் - உன்
காலம் கனிந்தது என கைகோர்த்தது என் கல்லூரி

கல்லாமையை இல்லாமையாக்க கல்லாமைக்கு - என்
கல்லூரி கட்டியது கல்லறை

உருவிலா எம்மை உலகிற்கு உருவாக்க - என்னை
உகந்த உத்தம ஆசானாக உருப்பெற செய்தது எம் கல்லூரி

வாழ்வியலையும் உளவியலையும் தினம் தினம் ஊட்டி - மாணவ
உறவுகளின் மேன்மையை காட்டியது எம் கல்லூரி

கற்பித்தலின் கடமையும் கண்ணியத்தையும் - ஒன்றென
கட்டுப்பாடோடு கற்றுக் கொடுத்தது எம் கல்லூரி

கல்வி உலகத்திற்கு உயிராக - என்னை
உருவாக்கி உயர்த்தியது இக்கல்லூரி

**ஆக்கம் : பி.பிரதீபா**
**கணிதம் தமிழ்மொழி மூலம்**



# 13. கலைமகளே

கனவுகளுடனும் கலங்கிய கண்களுடனும்
கலைமகளே வாசம் செய்யும் கல்லூரியில்
காலடி எடுத்து வைத்தேன் அன்று
கச்சிதமாக இச்சையுடன் கலைபயின்றபடி
என் ஆசிரிய கனவுகளை கட்டமைக்கின்றேன் இன்று

‘ஆசிரியர் வேலை’ என்றே ஆவலுடன் வந்தேன் அன்று
ஆனால் ‘ஆசிரியம்’ என்னும் மகத்துவ சேவைக்காக தயாராகின்றேன் இன்று

ஆடல் பாடல் கூடலுடன் நம் பண்பாட்டை மதிக்கும் கலாசார கோட்டையே
நம் கல்லூரி தான்
நண்பர்களில் பல்வகைமைகளை நான் பார்த்த இடமும்
இக்கல்லூரி தான்

மூன்று வருடங்களில் முத்து முத்தாக சம்பளம் என்றார்கள்
மூன்று வருடங்களில் முடியுமோ இல்லையோ
நான் முழு ஆசிரியராகி விட்டாலே போதும்

பள்ளியில் சிறு பிள்ளையாக துள்ளித்திரிந்தவள் நான்
இனி பள்ளியில் கண்ணியத்துடன் இருக்கவேண்டிய காவலாளி நான்

கற்பித்தலும் கற்றலும் கண்ணும் இமையும் என்றால்
நம் கல்லூரியும் நானும் அவ்வாறே இருப்போமே

பெற்றவர்கள் உச்சிகுளிர மற்றவர்கள் மனம் மகிழ
மகத்துவ சேவைக்காய் நான் தயாராகின்றேன்

கம்பீரமதனை காட்ட ஒரு பீடாதிபதி
கண்ணியம் அதனை காட்ட பல கல்வியலாளர்கள்
கண்களால் காணாவிட்டாலும் கண்காணிகாக்கும் சிரேஷ்ட மாணவர்கள்
காத்திரமாய் இயங்கும் எம் கல்விசாரா பணியாளர்கள்

கலைமகளே உன்னை வேண்டுகின்றேன் என் கல்லூரி அன்னைக்கு
என்னையும் ஒரு காணிக்கை ஆக்கிவிடு.

**கோ.பிரபாலினி**
**கணிதம் தமிழ்மொழி மூலம்**



# 14. கல்லூரி நாட்கள்

என்றும் வாசிக்க விரும்பும் கவிதை

என் கல்லூரி நாட்கள்!!!

கடந்து வந்த நாட்களை காட்டிலும்

கலையாத நினைவுகள் இங்கு அதிகம்

சிறகடித்த பறவைகள் இன்று

சிறகடிக்க மறந்து

நான்கு சுவற்றுக்குள்

நாட்களை கடத்தினாலும்

எம் சுதந்திரத்திற்கோ குறைவில்லை.

எங்கும் சிரிப்பொலிகள்

வெள்ளமாய் பேச்சலைகள்

கரைபுரளும் குறும்புகள்

செல்லச் சிறு சண்டைகள்

என நிரம்பி வழிகின்றது

எம் கல்லூரி நாட்கள்..........

**“நல்ல ஆசிரியர் என்பவர்**
**அறிவுத் தேடலில்**
**மாணவனுடன் சகபயணியாக**
**பயணிக்க வேண்டும்”**

- **Dr.S.Radhakrishnan**

**ஆக்கம் : சஜிக்கா**
**கணிதம் தமிழ்மொழி மூலம்**



## 15. சிற்பி

சிதைந்து உடைந்த கற்பாறை -யான்

ஊழிகால இருள் சூழ்ந்திட முன்

உளி கொண்டெனை உருவம் ஆக்கினாய்

கானகம் தனில் தளிர் விட்ட செந்தாமரை - எனை

சூரியன் கைபிடித்து பயணம் தொடரும்

பாலைவன பயணர் என்னை

கை பிடித்தே வா என் அன்னையே

கற்றது சொல்லவா? பெற்றது சொல்லவா?

மாறல் சொல்லவா? மாற்றியது சொல்லவா?

ஆர்க்கிமெட்சின் கையோடும்

பைதகரசின் மொழியோடும்

ஓயிலரின் தேற்றமும் தேறிய கணிதத்தின்

கை விடாமல் கரம் சேர

வித்தகரின் சித்த ஒளியில் துலங்கிய

பொன்னே

உன்னை அணைக்கவா? பணியவா?

உன் அருள் பாடவா?

உன் புகழ் மாறாது மனம் முழுதும்

நிலைத்து நில் என் அன்னையே...

**ஆக்கம் : ச.சுஜீபன்**
**கணித தமிழ்மொழி மூலம்**



## 16. கல்லூரிப் பயணம்

காலமும் கனிந்தது காத்திருந்த அந்த நாள்

வந்துசேர கல்லூரி நம்மை அழைத்தது

ஆம் அந்த நாள் தான் கல்லூரிக்குள் நாம் வரும் முதல் நாள்.....

அன்று நாம் அனைவரும் பெற்றோரோடு இங்கு வந்துசேர

பள்ளி ஞாபகம் மெதுவாய் எட்டிப் பார்த்தது அன்று நம் பாடசாலை முதல் நாள்

அம்மாவின் கைபிடித்து பாடசாலை செல்லமாட்டோம் எனக் கூறி நின்றது...

இன்று நம் பெற்றோர்கள் கண்கலங்கி நம் வாழ்க்கைகாய் நம்மை வழி அனுப்பி வைக்க...

நாமும் கல்லூரி நாட்களை எண்ணத் தயார் ஆனோம்

நாட்கள் நகர நட்புகளோடு கைகேர்த்தோம் எம்மோடு

துணையாக கல்விப் பயணத்தை சிறப்பாக நாமும் தொடர்தோம்....

**“இயற்கைதான் சிறந்த ஆசிரியர்”**

**- George Carver**

**ஆக்கம் : ஸ்ரீ.நவிலால்**
**கணிதம் தமிழ்மொழி மூலம்**



## 17. வார்த்தை இல்லை வாழ்க்கை

வங்கி முகாமையாளராக வர எண்ணி
வங்கியில் பணியாற்றிய தருணம் - அது
அன்றொருநாள் வந்தது அந்த மடல்
இன்பக்கடல் தன்னில் குதித்தாள் - என் தாயவள்

ஒரு துளி விருப்பமுமின்றி சம்மதம் கொண்டேனே
எல்லாம் என் அன்னையின் புன்சிரிப்பால்
மீண்டும் பள்ளி செல்வது போல் ஒரு வடிவமைப்பு
சென்று பார்த்தால் எல்லாம் வெள்ளை மயம்

நாட்களோ சென்றன எதிர்காலம் வெளிப்பட்டது
எங்களைப்போல் அதிஷ்டம் கொண்டவர் - எவரோ
தோழர்கள் தோள் கொடுக்க
கல்வியலாளர்கள் கலைகள் பல புகட்ட

தலைமைத்துவத்திற்கு தடையில்லை
நற்சிந்தனைக்கு நஷ்டமும் வந்ததில்லை
நல் ஆற்றல்களை வெளிப்படுத்தி
நல்ல ஆளுமைகளை வளர்த்துக் கொண்டோம்

தந்தையை இழந்தவன் ஆனாலும்
தந்தையாக ஒருவனை பெற்றேனே
தற்பெருமை கொண்டவர் அல்ல - அவர்
தன்னிச்சையாக செயற்படுபவரும் அல்ல

பற்பல கற்றுக் கொண்டேன் - என்னை

நல் ஆசிரியன் ஆக்கிக்கொண்டேன்

வெறும் வார்த்தைக்கான வரிகள் அல்ல

இவை என் கல்லூரி வாழ்க்கைக்கான வரிகள்.

**“நான் உயிரோடு இருப்பதற்கு என் தந்தைக்கு கடமைப்பட்டிருக்கிறேன் ஆனால் சிறப்பாக வாழ்வதற்கு என் ஆசிரியருக்கு கடமைப்பட்டிருக்கிறேன்**

- **Greta Alexandar**

**ஆக்கம் : கு.கலைவர்ணன்**
**கணிதம் தமிழ்மொழிமூலம்**



## 18. தேவதை

பிரிய போகும் நாட்களை நினைத்து
கண்கள் கலங்குவதா
இருக்கும் நாட்களை நினைத்து
ஆனந்தம் கொள்வதா
அறிவை புகட்டிய ஆசான்கள்
வாழுமிடம்
அறிவில் எமை உயர்த்தும்
அன்னையுமவள்
கல் மண் கொண்டு கட்டினாலும்
எம்மை அன்பால்
ஒன்றிணைத்தாள்
என்றும் என் நெஞ்சில்
தேவதையாய் வீற்றிருப்பவள்
அவளே

**"ஒரு நல்ல ஆசிரியர் பதில்களை விட அதிகமான கேள்விகளைக் கேட்கிறார்"**
**- Joscf Albers**

**த.அஜந்தன்**
**கணிதம் தமிழ்மொழி மூலம்**



## 19. எம் கல்லூரி

கலைகள் பல கற்க உற்ற தோழனாய் கவலைகள் மறக்க
நண்பர்களை அறிமுகப்படுத்தினாய் கண்ட கனவுகளை எம்
வாழ்வில் நியப்படுத்தி எம்மவர் மத்தியில் என்னையும்
பெருமை கொள்ள வழிப்படுத்தினாய்

பண்புடன் பணிவையும் வளர்த்தாய்
பள்ளி மாணவர் நிலை மறந்து குருவாக்கினாய்
பாசத்தால் உருவாகும் வேர்களுக்கு வலுவூட்டினாய்
பெரும் போராட்டங்களை எல்லாம் பொசுக்கும் வித்தையை வளர்த்தாய்

கால ஓட்டத்திற்கு எம் கால்களை வேகப்படுத்தும் நுட்பத்தை
பழக்கினாய் சோர்வடையும் வேளையில் புத்துணர்ச்சி தந்தாய்
வாழ்வில் சாதிக்க பல வழிகளை ஏந்படுத்தி தந்தாய்
ஆண் பெண் பாலினத்தை மறந்து சகோதரத்துவத்தை வளர்த்தாய்

சவால்களை சந்தர்ப்பமாக்கி என் ஆற்றல்களை வெளிப்படுத்தினாய்
ஆசிரியர் என்னும் நாமத்திற்கு உரிமைகொள்ள அத்திவாரமிட்டாய்
காலங்கள் பயணித்தாலும் உன் புகழ் மங்காது உன் புகழ் மேலோங்க
என்றும் துணை நிற்போம்.

**“கற்பித்தல் என்பது புரிதலின் மிக உயர்ந்த வடிவம்”**
**- Aristotle**

**ஸ்ரீ.தர்சிகன்**
**கணிதம் தமிழ்மொழி மூலம்**



## 20. மீண்டும் அடைவேனா?

புரியவில்லை ஒன்றும் நமக்கு

பார்த்த நாள் ஞாபகம் இல்லை

பழகிய தினங்களும் மறந்தன

ஒன்று நிச்சயம்

பிரியும் நாள்

மறக்கமுடியாத நாளாய் அமையும்

நட்புகள் கிடைத்தன

சந்தோசம் கோபம்

காதல் கடலை சில தோல்வி

ஏற்றுக்கொள்ளாத பிரிவு

வகுப்பில் தூக்கம்

இரண்டு வேளை தேனீர்

மூன்று வேளை உணவு

நான்கு மணிக்கு விடுதி

தேர்வு நாட்களின் கடைசி நேர படிப்பு

தேர்வு அறை அமைதி

ஒற்றை ஆண்டு ஓடியது இவ்வாறே

இந்த நாட்கள் தான்

மாணவ ஆசிரியர்களின் பொக்கிஷம்

நினைதவுடன் வீடு செல்ல முடியாது

இன்று யோசித்தேன் இனி கிடைக்காது

இருக்கும் நாட்கள் ஒன்றாய் இருப்போம்

பிரிய போகும் நாள்

கண்ணில் நீர் ஓடும்

வார்த்தைகள் பேசாது

கண்கள் பேசும்

கோபத்தை விட்டு வெளியே வா

மீண்டும் சேர்வோம்

பழைய நட்போடு

இருக்கும் சில நாட்களாவது அனுபவிப்போம்

**"ஆசிரியரின் பாராட்டு கல்வி உலகைச் சுற்றச் செய்கிறது"**

**- Helen Peters**

**ஆக்கம் : ப.சதூசன்**
**கணிதம் தமிழ்மொழி மூலம்**



# கல்லூரியின் வருடாந்த தொனிப்பொருட்கள்

**2019 - "எனது சூழல் நானே பொறுப்பு "**

**2020 - "ஒரே இலக்கு ஒரே அணி "**

**2021 - "நல்லதே நடக்கும்"**

**2022 - "சவால்களை சந்தர்ப்பங்களாக்குவோம்**

**2023 - "எனது ஆற்றல்களே என்னை வெளிப்படுத்தும்**




Maths Tamil medium
20th batch